# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/24—1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා—1976.12.17

243/24 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (70)/76.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மீது, சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**வி. கொபல்லவ,**
*சனாதிபதி.*

கொழும்பு,
1976, திசெம்பர் 17.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் அவசரகால (அரசாங்க ஆதனத்தினைப் பாதுகாத்தல்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) புகைவண்டித் திணைக்களத்துக்கு, தொலைத் தொடர்புத் திணைக்களத்துக்கு, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு அல்லது இலங்கை மின்சாரச் சபைக்குச் சொந்தமான ஏதேனும் ஆதனத்தை, சட்டமுறையான அதிகாரமின்றி அல்லது நியாயமான காரணமின்றி (அதனை எண்பித்தற்கான பொறுப்பு அத்தகைய ஆளைச் சார்ந்ததாதல் வேண்டும்) தனது உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவரான, அல்லது அத்தகைய ஆதனம் தொடர்பில் திருட்டு அல்லது குறும்பு புரிகின்றவரான எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இப்பந்தியில் " திருட்டு ", " குறும்பு " என்னும் சொற்கள், முறையே தண்டனைச் சட்டக்கோவையில் உள்ளவாறான அதே பொருள்களைக் கொண்டுள்ளன.

(2) சம்பந்தப்பட்ட ஆதனம், விடயத்துக்கேற்றவாறு, புகைவண்டித் திணைக்களத்துக்கு, தொலைத் தொடர்புத் திணைக்களத்துக்கு, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு அல்லது இலங்கை மின்சாரச் சபைக்குச் சொந்தமானதென அத்தாட்சிப்படுத்துகின்றதும், இதற்கான அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் அல்லது சபையின் விடயத்தில், அவ்வட்டவணையின் I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள அலுவலரொருவரது கைப்பட எழுதப்பட்டதெனக் கொள்ளப்படுகின்றதும் ஆன சான்றிதழொன்று சட்ட நீதிமன்றமொன்றில் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் கூறப்பட்டுள்ள கூற்றுக்களின் உண்மை பற்றிய முதற்றோற்றச் சான்றாக இருத்தலும் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் எவரேனும் ஆள், நீதிவானொருவர் முன்னிலையில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது 5 ஆண்டுகளுக்குக் குறையாததும், 7 ஆண்டுகளுக்கு மேற்படாததுமான காலமொன்றிற்கு மறியற்றண்டனை ஆளாதல் வேண்டும்.

**அட்டவணை**

| நிரை I | நிரை II |
|---|---|
| பொது முகாமையாளர், புகைவண்டிச் சேவை | புகைவண்டித் திணைக்களம் |
| பிரதான தொலைத்தொடர்பு எந்திரி | |
| சைகை, தொலைத்தொடர்பு எந்திரி | |
| பிரதான எந்திரி (இருப்புப்பாதைகள், கட்டுவேலைகள்) | |
| இயக்கப்பொறி ஆற்றல் கண்காணிப்பாளர் | |
| புகைவண்டிச்சேவைக் களஞ்சியப்பொருட் கண்காணிப்பாளர் | |
| மாவட்ட எந்திரி | |
| மாவட்டக் கண்காணிப்பாளர் | |

அட்டவணை—(தொடர்)

| நிரை I | நிரை II |
|---|---|
| பிரதான தொலைத்தொடர்பு எந்திரி .. | .. தொலைத்தொடர்புத் திணைக்களம் |
| தொலைத்தொடர்புக் கண்காணிப்பு எந்திரி | |
| பிரதேசத் தொலைத்தொடர்பு எந்திரி | |
| பிரதான பொறிமுறை எந்திரி (உற்பத்தி) .. | .. இலங்கைப் போக்குவரத்துச் சபை |
| பிரதான பொறிமுறை எந்திரி (பராமரிப்பு) | |
| பிரதான வழங்கல்கள் அலுவலர் | |
| பிரதான சிவில் எந்திரி | |
| பிரதான இயக்கல்கள் முகாமையாளர் | |
| பராமரிப்பு எந்திரி | |
| பரப்பு எந்திரி | |
| பரப்புக் கட்டுப்பாட்டாளர் | |
| கட்டுவேலை எந்திரி | |
| சாலைக் கண்காணிப்பாளர் | |
| பொது முகாமையாளர் .. .. | .. இலங்கை மின்சாரச் சபை |
| பிரதிப் பொது முகாமையாளர் | |
| பிரிவு முகாமையாளர் | |